**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 611/2022 PW . 3**

| | |
|---|---|
| Name :Azhagappan | Fathers Name : Kumaravel |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2023

**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் கழனிவாசல் காரைக்குடியில் வசிக்கிறேன். தச்சராக வேலை பார்க்கிறேன். 10.09.2016 அன்று எனது மகள் மகாலட்சுமி என்பவர் என்னை பார்ப்பதற்காக இருசக்கர வாகனத்தில் வந்தார். அன்று மாலை 6 மணியளவில் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் பெரியார் சாலை அருகில் சானாங்காளி கோவில் அருகே பள்ளி சாலை சென்று கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எனது மகளின் முதுகை பின்புறமாக தட்டியுள்ளார். மகள் திரும்பி பார்த்தபோது எனது மகள் கழுத்தில் அணிந்திருந்த 8 பவுன் தங்க தாலி செயினை அந்த நபர் பறித்துவிட்டு பெரியார் சாலை சென்றுவிட்டதாகவும் மேலும் அவரை எனது மகள் அதே இருசக்கர வாகனத்தில் துரத்தி சென்ற போது மேற்படி நபரை கண்டறியமுடியவில்லை என்றும் மேற்படி நிகழ்வுகளை எனது மகள் அன்றைய தினம் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு என்னிடம் கூறினார். நான் சம்பவத்தை கேள்விபட்டு எனது மகளிடம் சென்று சம்பவ விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு காரைக்குடி வடக்கு காவல்நிலையம் சென்று அவர் புகார் அளித்தபோது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகமான இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் போலீஸ் பீட், சிக்னல் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் எனது மகள் சொல்லிதான் எனக்கு தெரியும்.

மறு விசாரணை: இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 611/2022 PW . 4**

| | |
|---|---|
| Name :Chandra | Husband's Name : Azhagappan |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2023

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

நான் கழனிவாசல் காரைக்குடியில் வசிக்கிறேன். வீட்டு வேலை பார்க்கிறேன். 10.09.2016 அன்று எனது மகள் மகாலட்சுமி என்பவர் என்னை பார்ப்பதற்காக இருசக்கர வாகனத்தில் வந்தார். அன்று மாலை 6 மணியளவில் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் பெரியார் சாலை அருகில் சானாங்காளி கோவில் அருகே பள்ளி சாலை சென்று கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எனது மகளின் முதுகை பின்புறமாக தட்டியுள்ளார். மகள் திரும்பி பார்த்தபோது எனது மகள் கழுத்தில் அணிந்திருந்த 8 பவுன் தங்க தாலி செயினை அந்த நபர் பறித்துவிட்டு பெரியார் சாலை சென்றுவிட்டதாகவும் மேலும் அவரை எனது மகள் அதே இருசக்கர வாகனத்தில் துரத்தி சென்ற போது மேற்படி நபரை கண்டறியமுடியவில்லை என்றும் மேற்படி நிகழ்வுகளை எனது மகள் அன்றைய தினம் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு காவல்நிலையத்தில் தான் புகார் கொடுத்த சென்றிருப்பதாக என்னிடம் கூறினார். நான் சம்பவத்தை கேள்விபட்டு எனது மகளிடம் சென்று சம்பவ விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகமான இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் போலீஸ் பீட், சிக்னல் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் எனது மகள் சொல்லிதான் எனக்கு தெரியும்.

மறு விசாரணை: இல்லை